[1974 சனவரி 25

*159 வினா—திரு. சி. க. வடிவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை மற்றும் மேட்டுப் பாளையம் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டம் குறித்து திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றக் கட்டத்தின் பரிந்துரை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், மேற்படி திட்டங்கள் எப்போது நிறை வேற்ற எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீடு ஏற்கெனவே பரிசிலனையில் உள்ளது. மேட்டுப்பாளையம் பஞ்சாயத்திற்கான திட்டம் எதுவும் இல்லை.

திரு. கு. காமாட்சி: மேட்டுப்பாளையம் தாத்தையங்கார் பேட்டை, துறையூர் போன்ற பகுதிகளுக்கெல்லாம் புளியஞ்சோலை யிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து குடிநீர் வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? இல்லாவிட்டால் அதை மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒவ்வொரு திட்டமும், எந்த இடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டும், எவ்வளவு தொலைவு தண்ணீர் வரவேண்டும், எந்த அளவுக்கு நீடிக்க முடியும், எந்த அளவுக்குப் பல்வேறு பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்க முடியும் என்று பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டுதான் மேற் கொள்ளப்படுகிறது. இப்பொழுது தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி மன்றத்தைப் பொறுத்த வரையில், ரூ. 22,000 செலவில் குடி நீர் திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீட்டை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒப்புதலுக்காக வாரியத் தலைமைப் பொறி யாளர் அனுப்பியிருக்கிறார். மேலும் தொடர்ந்து அதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 160, 161, 162, 163, 164, 165 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.